**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திரு T. சோழவேந்தன்,** B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 06-ம் நாள் புதன்கிழமை
******

**இடைமனு எண்.2/2024-ல் அசல் வழக்கு எண். 213/2019**

சகுந்தலா ... மனுதாரர்/வாதி

...எதிர்...

மகாராஜன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 04.03.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு S.முத்துக்குமார் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு S.சுவாமிநாதன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியத்தை மறுதிறப்பு (Re-open) செய்ய அனுமதி கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வி.மு.ச.151-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/வாதி, எதிர்மனுதார்/பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மனுதாரர்/வாதியின் தரப்பில் முதல் விசாரணை முடிக்கப்பட்டு, குறுக்கு

விசாரணைக்காக வாய்தா கெடு போடப்பட்டுள்ளது. ஆனால் சில முக்கியமான ஆவணங்கள் தேடிப்பார்த்ததில் மனுதாரர்/வாதியின் கட்சிக்கு சாதகமாக அமைந்துள்ளதால் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவேண்டுமென்று மனுதாரர்/வாதிக்கு தற்போதுதான் ஆலோசனை கிடைத்துள்ளது.

(ii) மனுதாரர்/வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக போடப்பட்டுள்ள மனுதாரர்/வாதியின் சாட்சியத்தை மறுதிறப்பு (Re–open) செய்து இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வழக்கினை மேல் நடத்தவில்லை என்றால் மனுதாரர்/வாதிக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அவ்வாறு மறுதிறப்பு Re–open செய்து வாதி தரப்பில் முதல் விசாரணை செய்வதால் எவ்வித சட்டப்படியான இழப்பும் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு ஏற்படபோவதில்லை. இம்மனு அனுமதிக்கப்படவில்லையென்றால் வாதிக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியத்தை மறுதிறப்பு (Re–open) செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள்ள எதிருரையின் சுருக்கம்</u>.**

(i)இதில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மனு அபிடவிட்டின் மற்ற சங்கதிகளை எதிர்மனுதாரர்/பிரதிவாதி வன்மையாக மறுக்கின்றார். அவைகளை நிரூபிக்க மனுதாரர்/வாதி கடமைப்பட்டவர். மனுதாரர்/வாதி உண்மைகளை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. வாதி 20.04.2017-ம் தேதிக்குள் வழக்கு சொத்துக்களுக்கு குத்தகையாக செலுத்த வேண்டிய ரூ.41,441/- ஐ செலுத்த வருவாய் நீதிமன்றம் 28.03.2017-ல் உத்தரவிட்டுள்ளது.

(ii) வாதி, பிரதிவாதி அதை செலுத்தாத காரணத்தினாலும்

எதிர்மனுதாரர்/எதிர்வாதி கேட்டும் செலுத்த முன் வராததாலும், எதிர்மனுதார்/எதிர்வாதியே அதை 12.06.2019 அன்று மேற்படி தொகையை செலுத்தி அதுமுதல் வழக்கு சொத்தையும் சேர்த்து குத்தகைதாரராக எதிர்மனுதாரர் அனுபவித்து வருகிறார் என்பதுதான் எதிர்மனுதாரர்/எதிர்வாதியின் கட்சி.

(iii) 2019-ம் ஆண்டுக்கு முன்பு வழக்கு சொத்து எதிர்மனுதாரர் வசம் இருந்ததாக மனுதாரர் 2018 ஆண்டுக்கு முன்பு கட்டிய குத்தகை ரசீதுகள் மேற்படி ரசீதுகளுக்கும் இந்த வழக்கிற்க்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இந்த ஆவணங்கள் வழக்கில் வாதிக்கோ, வழக்கிற்கு தேவையான ஆவணங்கள்அல்ல. மேலும் Re-open தாக்கல் செய்துள்ள இந்த மனு வழக்கை காலம் கடத்தவே தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒரு மனுவாகும். எனவே மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3.இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?**

4. இம்மனுவில் மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. <u>தீர்வு:</u>**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இவ்வாறான நிலையில் மனுதாரர்/வாதி தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி வா.சா.1–ன் முதல் விசாரணையை மறுதிறப்பு செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

(ii) வா.சா.1–ஐ எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இன்னும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்பதாலும், மனுதாரர்/வாதி தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இதனால் வழக்கின் விசாரணை எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்களைப் பொறுத்தும் குறுக்கு விசாரணை செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளது.

(iii) மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும் மனுவின் தன்மை கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 06-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி

**பின் இணைப்பு**

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> – இல்லை –
<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> – இல்லை –
<u>எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள்</u> – இல்லை –
<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> – இல்லை –

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.2/2024–ல்
அசல் வழக்கு எண்.213/2019
நாள்.06.03.2024